புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==================================================

# அகத்தில் பாடினியரும் பரிசிலரும்

==================================================

முனைவர் கோ.கமலா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
தூயநெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்,

**முன்னுரை:**

ஒரு மனிதன் தன்னுடைய கற்பனைக்கு எட்டாப் பொருளைச் சிந்தனைக்கும் மன உணர்ச்சிக்கும் ஏற்றவாறு வெளிப்படுத்தும் சிறந்த திறனே “கலை” எனப்படுகிறது.

“காண்கின்ற காட்சியிலும் கேட்கின்ற இன்னோசையிலும் மனங்கவிந்து நாட்டத்துடன் திரட்டப்படும் அழகுணர்வை ஒருவன் எவ்வாறேனும் புறக்கருவி வாயிலாக புலப்படுத்த ஆர்வம் கொள்கிறான். அவன் கல்லைக் கருவியாக் கொண்டு சிற்பத்தையும், வண்ணத்தைக் கருவியாகக் கொண்டு ஓவியத்தையும், ஓசையைக் கருவியாக் கொண்டு இசையையும், நடிப்பைக் கருவியாக் கொண்டு கூத்தையும் நிகழ்த்துவதோடும் சிறப்பான ஒவ்வொன்றையும் கருவியாகக் கொண்டு ஒவ்வொரு கலையையும் வினைப்பாங்குடன் உருவாக்கலானான். இவ்வாறாக உருவாக்கப்பட்ட கலை பற்றி சிந்திக்கையில் கலை என்பது செயல் திறனைச் சிறப்பாக உணர்த்துகிறது என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

இயற்கையாகவும் மக்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட பொருளையும் கலையாக அல்லது கலை படைப்பாகக் கருதலாம். கலை என்பதற்கு அவர் காலங்களில் மக்களின் வாழ்வியல் பண்பாட்டிற்கு ஏற்பும் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்பவும் அவரவர் எந்த எந்தக் கோணத்தில் நோக்குகின்றனரோ அந்தந்தக் கோணத்தைப் பொறுத்தே விளக்கத் தரப்படுகிறது. எனவே, கலையை இன்னது தான் என்று இலக்கண வரையறை கூறி விளக்க இயலாது .

கலை மெய்ப்பொருளின் முற்றத்திலிருந்து துய்ப்போரை கருவறைக்கு இட்டுச் சென்று உலகியலைக் கடந்து நிற்கும் காட்சியினைப் புலப்படுத்தி நிற்கும் என்று கோல்ரிட்சு செல்லிங்கு குறிப்பிடுகின்றார். கலை மனிதனுக்குக் கட்டுப்பட்டதன்று. கலை ஒரு கருவி. மனிதனுக்கு மகிழ்வு தரும் கருவி. நேர்மையான மகிழ்வு. அம் மகிழ்வு மனிதனின் உள்ளத்தை பொருத்தது என்று வீ.மி ஞானப்பிரகாசம் கூறுகிறார் .அறிஞர்களின் கருத்துப்படி கலை உருவமற்றது என்று தெளிவாக வெளிப்படுத்துகிறது. மனதினைப் பொறுத்துக் கலை அமைகின்றது. கலையின் தாக்கம் மனதிற்கு மனம் வேறுபடலாம்.

**பாடினியர்:**

பாடினி என்பது பாடல் பாடும் பெண்டிரைக் குறிப்பிடுவது ஆகும். ஆடல் பாடும் ஆண்மகனைப் பாணன் என்று குறிப்பிடுவது போல பாடல் பாடும் பெண்டிர் பாடினி என்று குறிப்பிடப்பட்டிருந்தனர். பாணர்களில் ஆடவர்களைச் “சென்னியர், வயிரியர், செய்யிறியர், மதங்கர் இன்னிசைக்காரர் என்று குறிப்பிடப்படுவதுண்டு. மகளிர் பாடினி, விரலி, பாட்டி, மதங்கி, பாடல் மகடூஉ, பான் மகள் எனப் பெயர் பெறுகின்றனர்“ என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது. இக்கருத்தின் வழி பாடினி பல பெயர்களில் அழைக்கப்பட்டது புரிய வருகிறது.

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பாடினி என்ற பெயரால் அழைக்கப்பட்ட பாண்குல மகளிர் இனிய இசை பாடுவதில் வல்லவராய் இருந்துள்ளனர். இம்மகளிர் போர் முனையில் வெற்றி கொண்டு வாகை சூடி வரும் மன்னர் முன்பு அவனது வெற்றியைப் புகழ்ந்து பாடியதை,

**"இரு பேரு வேந்தர் மாறுகொள் வியன்களத்**
**தொருபடை கொண்டு வருபடை பெயர்க்குஞ்**
**செல்வ முடையோர்க்கு நின்றன்று விறலென " (அகம்-174)**

என்னும் பாடல் அடிகள் கொண்டு விளக்க முடிகிறது. போர் வீரர்களை மகிழ்விக்கும் வண்ணம் அவர்களைப் புகழ்ந்து ஆடி பாடி மகிழ்ந்து வெற்றிச் சிறப்பை இவர்கள் வெளிப்படுத்தினர்.அரசன் படையெடுத்துப் போகும் போது, பாடினி அவனது படையெடுப்பைப் பாடுவதும், அரசன் பாசறையில் தங்கி இருக்கும்போதும் பாடினி அவன் வேற்படையைப் புகழ்ந்து பாடுதலும் உண்டு. மேலும் பாடினியர் போர்க்களத்திற்குச் சென்று புண்பட்டுத் துன்புறும் வீரர்களுக்கு இசை பாடி அத்துன்பத்தை மறக்க செய்தனர் - என்று வி.சி சசிவல்லி பாடினியர் புகழ் பற்றி குறிப்பிடுவது இங்கு நினைவு கூறத்தக்கது.

பாடினியின் திறன் பற்றி இலக்கிய நூல்கள் மிகவும் கூரிய முறையில் வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு இலக்கியத்திலும் பெண்களின் தனித்திறமை வெழிக்காட்டப்பட்டுள்ளது. " பாடினி மெல்லியலாகப் பிறந்து அவ்வியல்பிலேயே வளர்ந்து மெல்லியல் கலைக்கே தன்னை ஆட்படுத்திக் கொண்டு மெல்லியல் கலைக்கே தன்னை ஆளாக்கிக் கொண்ட பாணனுக்குக் காதலால் தன்னை ஆளாக்கிக் கொண்டவள். இவ்வாறு இருக்கும் பொழுது சங்கச் சான்றோர்கள் மெல்லியல் விறலி என்கின்றனர்” என்று ரா இளங்குமரன் பாண் மகளது இயல்பினை வெளிப்படுத்துகிறார்.பாணர் தம் கலையாற்றலைப் பல்லோருக்கும் புலப்படுத்த வேண்டும் என்பதற்காகத் திருவிழா நடைபெறும் இடங்களுக்கு எல்லாம் சென்று தம் திறனை வெளிப்படுத்துவதில் தனி ஆர்வம் கொண்டிருந்தனர். அரசன் படையெடுத்துப் போகும் போது பாடினி படையெடுப்பைப் பாடுவதும் அரசன் பாசறையில் தங்கி இருக்கும் போது பாடினி அவன் வேற்படையைப் புகழ்ந்து பாடுதலும் உண்டு. இதனை,

**" உரவுக் களிற்றுப் புலாம் பாசறை**

**நிலவினன்ன வெள்வேல் பாடினி**
**முழவின் போக்கிய வெண்கை "**

என்னும் பதிற்றுப்பத்து பாடல் அடிகள் மூலம் கண்டு கொள்ளப்படுகின்றன. இதன் வாயிலாக பாடினியின் கலைத்திறம் பற்றி அறிய முடிகின்றது. சங்க கால சமூகத்தில் ஆடல் பாடல் நிகழ்வு முழுமையாக அங்கீகரிக்கப்பட்டவையாகத் திகழ்கின்றன என்பது புலனாகிறது.

"போர் முனையில் வெற்றி கொண்டு வாகை சூடிய மன்னன் வரும்போது அவன் தேரின் முன்னும் பின்னும் ஆடல் பாடல் வல்ல வீரமகளிர் அவன் வெற்றியைப் பாடி புகழ்தலும் கூத்தாடுவதும் மரபு" என வே. வரதராசன் சங்ககால மகளின் கலைத்திறனைப் புலப்படுத்துகின்றார். கூத்தாடிகள் இசைக்கருவிகளைக் கொண்டு கூத்தினை நிகழ்த்தினர். அவ்வப்போது தங்களது ஊரில் மட்டுமல்லாது அருகாமையில் இருக்கும் ஊர்களுக்கும் சென்று கூத்தினை நிகழ்த்தினர் என்பதை,

**"இரும்பேரோக்கர் கூடிய இறந்த**
**புண்களை மன்றம் காணின் வழி நாள் " (அகம்-301)**

என்ற பாடல் விளக்கம் அளிக்கின்றது. பாணனின் மகள் மீன்பிடிக்கும் திறமையும் பெற்றிருக்கின்றாள். அதோடு தன் தந்தைக்கு உணவினையும் சமைத்துக் கொடுக்கின்றாள் பாடலினைப் பாடுவதுடன் தங்களது தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டதை,

**" ஞாண்கொணுண் கோலின் மீன் கொள் பாண்மகள்**
**தண்புன லடைகரைப் படுத்த வராஅல்"**

என்ற அகப்பாடல் விளக்கமளிக்கின்றன. பாணன் தன் குலத் தொழிலான பாடல் பாடுவதுடன் மீன்பிடிக்கும் தொழிலையும் கற்றிருந்தான் என்பது குறிப்பிடப்படுவது மட்டுமல்லாமல் பன்முகத்திறமை படைத்தவர்களாகவே சிறந்து விளங்கினர்.

ஆய் எயினரின் குன்றைப் புகழ்ந்து பாடிய பாணனுக்குப் பரிசிலாக வெண்மையான கொம்பையும், யானையையும் கொடுத்ததை

**“யாம விரவி னெடுங்கடை நின்று**
**தேமுதிர் சிமையக் குன்றம் பாடு**
**நுண்கோ லகவுநர் வேண்டின வெண்கோட்**
**டண்ணல் யானை ஈயும் வண்மகிழ்" (அகம்-208)**

என்னும் பாடல் அடிகள் மூலம் அறியப்படுகிறது. பாணன் பாடல் கலையில் சிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாமல், மீன் பிடித்தல், தூது செல்லுதல் திறனையும் பெற்றிருந்தான். இது,

**“பாணன் வந்தனன் றூதே நீயும்**
**புல்லர் புரவி வழி விரைந்து பூட்டி ”**

என்ற பாடல் மூலம் தெளிவாகிறது. சங்க கால சமூகத்தில் எப்பிரிவினராய் இருந்தாலும், அரசன் கூறும் கட்டளைகளுக்கு மறுப்புத் தெரிவிக்காமல் செயல்புரிந்தனர்.

பாணன் தன் பாணிச்சையோடு பாடல்களைப் பாடி அன்பினை வெளிப்படுத்தியது,

**"இருங்கழை யிறும்பி னாய்ந்துகொண் டறுத்த**
**நுணங்குகட் சிறுகோல் வணங்கிறை மகளிரொ**
**டகவுநர்ப் புரந்த அன்பிற் கழறொடி " (அகம்-97)**

என்ற பாடல்கள் வழி புலப்படுகிறது. பாலை நிலத்தில் கள்ளத் தொழிலைச் செய்து உயிர் பிழைத்தனர் என்று இதன் வழி அறிய முடிகிறது. பாலை நிலத்தில் வாழ்ந்த போதும் பாணர் குலத்தவர் பாடும் திறனைப் பெற்றிருந்தனர் என்பது புலனாகிறது.

பொன்னரிமாலை, முத்து, குறுந்தொடி, வயங்கு இழை போன்றவற்றுடன் பிடியையும் பரிசலாகப் பெற்றனர். இக்கலைஞரை நன்கு சிறப்பித்ததன் காரணமாக “பாடினிவேந்து“ என அரசர் போற்றப்பட்டிருத்தாலும் உண்டு, என்று முருகையன் குறிப்பிடுவதன் வாயிலாகப் பாணர் குலத்தவர் பாடல் பாடும் திறனைப் பெற்றிருந்தனர். பாராட்டிற்குப் பரிசிலும் பெற்று விளங்கினர் என்பதை அறிய முடிகின்றது. சங்ககாலத்தில் மக்கள் தங்களது மன மகிழ்ச்சியை முழுமையாக ஆடற்கலையிலும் பாடற்கலையிலும் வெளிப்படுத்தினர். ஆடவருடன் கூடிப் பெண்களும் இணைந்து தங்களது கலைத்திறமையை வெளிப்படுத்தி மனமகிழ்ச்சி அடைந்தனர்.

**பரிசிலர் :**

புலவர்களும், ஆடல்பாடல் கலைஞர்களும் மன்னர்களைப் புகழ்ந்து பாடி, ஆடி போற்றுகின்றனர். அரசர்கள் மனமகிழ்ந்து பரிசுகளை அவர்களுக்கு வழங்குவர். ஆகவே, கலைஞர்களைப் பரிசிலர் என்று கூறுவது உண்டு.

"பகைவர் தந்த திறைப்பொருளைக் கலைச் செல்வராகிய பரிசிலருக்கும், ஆற்றலற்ற எளியோராகிய இரவலர்க்கும் வரையாது கொடுத்தளித்தலைத் தமிழ் வேந்தர், தம் சிறப்பியல்பாகக் கொண்டிருந்தனர். பரிசிலர் தமக்குரிய கலையில் திறமை பெற்று வந்தாலும், திறமையின்றி வந்தாலும் வறுமையால் வந்த அவர்தம் பசித்துன்பத்தை உணர்ந்து அருளுடன் பரிசில் தந்து பாராட்டுதல் தமிழ் வேந்தர்களின் கடமையாகக் கருதப்பட்டது என வெள்ளைவாரணன் குறிப்பிடுகின்றார். பாலைநிலத்தலைவன் பொருள்தேடலின் காரணமாக தலைவியைப் பிரிகின்றான். அப்பொழுது பிரிவினைத் தாங்காத தலைவி கண்ணீர் விடுகின்றாள். இது போர்த்தொழில் புரியும் சேரமன்னனின் படைத்தலைவனான பிட்டன், அவனைப் புகழ்ந்து பாடும் கலைவாணர்களுக்குப் பரிசில் வழங்கியமைக்கு ஒப்பாகக் கூறப்படுகின்றது என்பதை,

**"வசையில் வெம்போர் வானவன் மறவ**
**னசையின் வாழ்கர்க்கு நன்கலஞ்சுரக்கும்**
**பொய்யா வாய்வாட் புனைகழற் பிட்டன் " (அகம்-143)**

என்னும் பாடல் வரிகள் தெளிவாக்குகின்றன. இரந்து கேட்பவர்களுக்கு இல்லை என்று கூறாமல் விலையுயர்ந்த அணிகளைப் பரிசிலாகக் கொடுத்தனர். இக்கருத்தின் மூலம் கலைஞர்கள் சங்க காலத்தில் சிறந்து விளங்கினர் என்பது புலனாகிறது. அரசர்கள், இரந்து வந்த பாணர்களுக்கு விலையுயர்ந்த முத்தும் மணியும் அணியப் பெற்ற யானைத் தேர்களைப் பரிசலாக வழங்கினர் என்பதை,

**"மருந்தும் முடையையோ மற்றே யிரப்போர்க்**
**கிழையணி நெடுந்தேர் களிரோ டென்று**
**மழைசுரந் தன்ன வீகை "**

என்னும் பாடல் அடிகள், பரிசில் கொடுத்ததையும் தமிழக வேந்தர்கள் செல்வ செழிப்போடு வாழ்ந்தார்கள் என்றும், மக்களும் சிறப்பாக வாழ்ந்தனர் என்பது தெரிய வருகிறது. இதற்குச் சான்று இன்றளவும் தொல்லியல் நமக்குச் சான்றாக அமைகிறது. கலைத்திறம் மிக்க வல்லவர்கள் சங்ககாலத்தில் இருந்திருக்கின்றனர் என்பதையும், மன்னர்கள் கொடைத்திறம் பெற்றிருந்தனர் என்பதையும், அவர்தம் நாடு செல்வச் செழிப்பு மிக்க நாடாக இருந்திருக்கின்றது என்பதையும் இதன் வழி கண்டுகொள்ள முடிகிறது. சங்ககாலத்தில் பாணர், விறலியர், கூத்தர் போன்ற கலைத்திறம் மிக்க வல்லுநர்கள் மன்னர்களிடம் பரிசில் செழித்தோங்கி வாழ்ந்திருந்தனர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிப்பதன் விளைவு பசுமை நிறைந்த நாடு என்ற பெருமை நமக்கு உண்டு.

**முடிவுரை:**

சங்க காலத்துப் பெண்கள் கலைத்துறையில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். தாங்கள் விரும்பி ஈடுபடும் கலைகளில் சிறந்த வெற்றியினைப் பெற்றனர். கலை உருவமற்றது. மனத்தின் தரத்தைப் பொறுத்து கலை அமைகிறது.சங்ககாலத்தில் பொன்னும் முத்தும் மணியும் செல்வச் செழிப்பாக இருந்தது. அரசர்கள் இரந்து வந்து பாணர்களுக்கு முத்தும் மணியும் அணியப்பெற்ற யானைத்தேர்களைப் பரிசிலாகக் கொடுத்தனர்.பண்டைத் தமிழ் சமுதாயத்தில் பாடினி என்ற பெயரால் அழைக்கப்பட்ட பாண்குல மகளிர் இசைபாடுவதில் வல்லவராயிருந்தனர். இம்மகளிர் போர் முனையில் வெற்றி பெற்று வரும் மன்னர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற செய்தி ஏராளமாக இருப்பதை அறியலாம் பாணர் தன்னுடைய கலைத்திறனைப் பல்லோருக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர். திருவிழாக் காலங்கள் அவர்தம் திறனை வெளிப்படுத்துவதற்கு ஏதுவாகயிருந்தது. பாடினி என்னும் மகளிரைக் கூத்துத் தொழிற் சார்ந்த மகளிராகக் கருதினர். இவர்கள் தமது ஆடற்கலையின் மூலம் வரும் வருவாயினைப் பயன்படுத்தி வாழ்க்கை நடத்தினர். மன்னரவை, பாசறை போன்ற இடங்களில் கலைத்திறனை வெளிப்படுத்திப் பாராட்டைப் பெற்று மனமகிழ்ச்சி அடைந்தனர்.

கலையில் சிறந்த விளங்கிய சங்க இலக்கியக் கலைஞர்கள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர். அரசர்களும் கலைஞர்களும் நல்லுறவோடு நாட்களைக் களித்தனர். பாணன், பாடினி கலைக்கு ஒரு அங்கீகாரம் கொடுத்தனர். சங்ககாலத்தில் கலைக்கு முக்கியமான இடத்தைக் கொடுத்தனர். இதனடிப்படையில் இக்காலக்கட்டத்திலும் கலைக்கான முழு அங்கீகாரம் கிடைக்கின்றதா இல்லையா என்பதை அடுத்து வரும் கட்டுரைகளில் விவரிக்கப்படும்.

**துணைநூற்பட்டியல்:**


1. வாழ்வியற் களஞ்சியம்-தொகுதி 6.
2. கமலையா.க.சி தமிழக நுண்கலைகள்.
3. சசிவல்லி வி.சி பண்டைத் தமிழர் தொழில்கள்.
4. இளங்குமரன்.இரா.பாணர்.
5. பதிற்றுப்பத்து உ.வே சாமிநாதய்யர்.
6. வரதராசன்.வெ. தமிழ்ப்பாணர் வாழ்வும் வரலாறும்.
7. முருகையன்.மு. சங்க இலக்கிய ஆய்வுகள்.
8. வெள்ளைவாரணன்.க. சங்ககாலத் தமிழ் மக்கள்.